# முதன்முறையாக பிரித்தானியாவில் தமிழர் மெய்வல்லுனர் போட்டி

britishtamilsathletics



தாயகத்தில் பாடசாலை ரீதியாகவும், விளையாட்டு கழகங்களுக்கு இடையேயும் இல்லங்களாக வகுக்கப்பட்டு நடைபெற்று வருகின்ற மெய்வல்லுனர் போட்டிகள் போன்று புலம் பெயர் பிரித்தானியா வாழ் ஈழத் தமிழர்களால் முதன் முறையாக இல்ல அடிப்படையிலான மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13ம் திகதி நடைபெறவுள்ளது.

இல்ல அணிவகுப்பு முதல் அனைத்து வகையான தட கள விளையாட்டுக்களையும் ஒருங்கிணைத்து நடைபெற இருக்கும் இம் மெய்வல்லுனர் போட்டியானது பிரித்தானியாவில் வசிக்கும் அனைத்து தமிழர்களையும் பகுதி வாரியாக இல்லங்களாக வகுத்து ஒரு விறுவிறுப்பான போட்டியாக இது அமைய இருக்கிறது.

இது ஒரு முதன் முறையான விளையாட்டுப் போட்டியாக அமைந்தாலும் இதன் அனைத்து ஒழுங்குபடுத்தல்களும் ஒரு தேசிய தரத்திற்கு அமைய நடைபெறவுள்ளன. இப்போட்டியானது இலண்டனில் நடைபெற இருக்கும் ஒலிம்பிக் போட்டிற்கான முன்னோடி நிகழ்வுகளுக்காக பிரித்தானிய விளையாட்டுத் துறை அமைச்சினால் 2007ம் ஆண்டு புதிதாக திறந்து வைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற இருப்பது சிறப்பம்சமாகும்.

பிரித்தானிய தேச அளவில் அனைத்து தமிழ் மக்களையும் ஒன்றிணைத்து இல்லங்களாக பிரித்து மாபெரும் போட்டியாக அமைய இருக்கும் இவ் நிகழ்வானது, தமிழரின் ஒற்றுமைக்கும் ஒழுங்கமைப்பிற்கும், விளையாட்டு ஆர்வத்திற்கும் நல்லதொரு சான்றாக அமைய இருக்கின்றது.

அத்துடன் இப்போட்டியானது விளையாட்டுத் துறையில் ஆர்வமும் நீண்ட கால அனுபவமும் கொண்ட பல முன்னாள் விளையாட்டு வீரர்களின் ஒத்துழைப்போடும், ஆலோசனைகளோடும் இம் முயற்சி முன்னெடுக்கப்படுவது இன்னுமொரு சிறப்பம்சமாகும்.

பிரித்தானியாவின் மெய்வல்லுனர் விளையாட்டைக் கட்டுப்படுத்தும் அமைப்புககளின் ஆலோசனைகளும் பயிற்சி நெறிகளும் எமது இந் நிகழ்வுக்கு மேலும் பலம் சேர்ப்பவையாக அமைந்துள்ளது. மேலும் விளையாட்டுத்துறை சார்ந்த தேசிய மட்டத்திலான பல பிரமுகர்கள் இவ் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளர்.

இவ்விளையாட்டின் ஆரம்பநிகழ்வு(Opening Ceremony) ஆனது எமது பாரம்பரியத்தை வெளிக்காட்டுவதுடன் ஒரு கண்கவர் நிகழ்ச்சியாகவும் அமையவிருப்பதுமேலும் ஒருசிறப்பம்சமாக இருக்கபோகின்றது. ஒவ்வொரு இல்லத்திலும் ஆண், பெண் பிரிவினராக ஏறக்குறைய 250 பேர் அணிவகுப்பில் கலந்து கொள்ள உள்ளனர்.

அதனைத் தொடர்ந்து கொடியேற்றல் வைபவம், பாரம்பரிய நடனம் என பல அம்சங்கள் ஆரம்ப நிகழ்வில் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து அனைத்து மெய்வல்லுனர் நிகழ்வுகளும் ஆண், பெண் பிரிவு என அனைத்து மட்ட வயதினருக்குமான இப் போட்டி ஒரு விறுவிறுப்பானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

அத்துடன் அஞ்சலோட்டம், கயிறிழுத்தல், சிறுவர் நிகழ்வுகள் என போட்டியுணர்வு மிக்க நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன.

விளையாட்டுப் போட்டி என்பது முடிவுகளில் ஏற்படும் வெற்றி தோல்விகளுக்கு அப்பாற்பட்டு அனைத்தையும் சமநிலையில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல மனநிலையை வளர்த்துக் கொள்ளும் ஒரு வாழ்வியல் அம்சமாகும்.இந்த வாழ்வியல் அம்சத்தினூடாக ஒரு ஒற்றுமையான ஒழுக்கம் நிறைந்த உன்னதமான சமூகமொன்றை கட்டி வளர்க்க முடியுமென்பது மறக்கமுடியாத உண்மையாகும்..

எனவே எமது புலம்பெயர் நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் இது போன்ற நிகழ்வானது ஒரு இன்றியமையாத நிகழ்வாகும்.

அதுமட்டுமன்றி தாயகத்தில் எமது பாரம்பரியங்களும் இயல்பான வாழ்க்கையும் சிதைக்கப்பட்டு சீரழிக்கப்படுகின்ற போதிலும் புலம் பெயர் வாழ் தமிழர்களின் இம்முயற்சியானது எமது பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் மீண்டும் நிலை நிறுத்தி அதற்கு புத்துயிர் கொடுக்கும் முயற்சியாக இதுபோன்ற செயற்பாடுகள் நிட்சயமாக அமையும்.

இதுபோன்ற முயற்சிகளுக்கு அனைவரும் ஒத்துழைத்து ஊக்கப்படுத்தி பலமாக நின்றால் எமது இனமும் பல முன்னணி விளையாட்டு வீரர்களை உருவாக்குவதோடு, ஓர் உன்னதமான சமூகமாக் உலகத்தில் அடையாளப்படுத்தப்படும்.

எனவே அனைத்து தமிழ் மக்களும் ஒற்றுமையாக ஒன்றுபட்டு இது போன்ற முயற்சிகளுக்கு உதவியையும் ஒத்துழைப்பையும் வழங்குவதோடு, அனைவரும் பங்கெடுத்து நின்று தமது தனிப்பட்ட வாழ்க்கையையும் வளமாக்கி எமது சமுதாயத்தின் பலத்தையும் உயர்த்துவோமாக.

இப்போட்டி சம்பந்தமான அனைத்து விபரங்களும் www.bt-sc.com என்ற இணையத் தளத்திலும் அனைத்து ஊடகங்கள் வாயிலாகவும் அறிந்துக்கொள்ளலாம்.

## சுஜாதா...

*(11ம் பக்கத் தொடர்ச்சி)*

சங்கஇலக்கியங்களோ, எம்காவியங்களோ அல்லது உலகத்தின் ஏனைய பரப்புக்களில் விளைந்த ஏனைய பெரிய இலக்கியங்கள் எதைச் செய்ய விழைந்தனவோ எதன் திசையில் இருந்தனவோ அதே திசையில்தான் சுஜாதாவும் பயணித்தார் என்பதில் சந்தேகமில்லை. அவர் எழுதிய அனைவற்றுக்கும் தமிழுலகம் என்றைக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டது.

அவரது பிறந்த நாளன்று ((3rd May) அவருக்கு 'Wishing you a Glorious day' என்று ஒரு மின் அஞ்சலில் வாழ்த்து ஒன்றை அனுப்பினேன். Hey....... Are you the Writer How do you do? என்று பதில் எழுதினார். அவர் படிப்பதில் எவரையுந் தான் விட்டு வைப்பதில்லை என்பது எனக்கு மீண்டும் பிரத்யட்ஷம் ஆகியது.

ராஜீவ் காந்தியின் கொலைக்குப்பிறகு தமிழகத்தில் வாழ்ந்த ஈழத்தமிழர்கட்கு சில நெருக்கடிகளும், அசௌகரியங்களும் ஏற்பட்டன. அவ்வேளையிலும் ராஜீவ் காந்தி செய்ததும் தவறுதான் ஆனால் அதற்கான தண்டனைதான் கொஞ்சம் அதிகம் என்றும், உண்மையான புறநானூற்றுத்தமிழர்கள் ஈழத்தில் தான் இருக்கிறார்கள் அவர்கள் போராட்டத்தில் நியாயம் உண்டு என்றும் எழுதினார். ஈழத்தமிழர்களின் போராட்டம் தேவையில்லாததென்றோ, அர்த்தமில்லாததென்றோ எவ்விடத்திலும் பதிவு செய்யவில்லை.

# மரண அறிவித்தல்



**திரு. கந்தையா சதானந்தன் (சிவா)**

இலங்கை அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், ஹறோ மேற்கு கோல்பெக் றோட் 9ம் இலக்க வீட்டில் வசித்தவருமாகிய **கந்தையா சதானந்தன்** 17-03-2008 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். இவர் பார்பறா ஜீன் (Barbara Jean) இன் அன்புக் கணவரும் காலம் சென்ற ஜெயசீலன் (UK), மங்கையற்கரசி (USA), அருளானந்தம் (USA), திருநாவுக்கரசு (UK), ஆகியோரினதும், திரு உலகநாதன் (USA), மனோரஞ்சிதம் (USA), Capt. சந்திரப்பிரகாசம் (UK), ரூபி ஜெயபாலன் (USA) ஆகியோரினதும் சகோதரனாவார்;.

அன்னாரின் பூதவுடல் 28.03.2008 வெள்ளிக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை 142 ஸ்ரேசன் றோட் ஹறோ HA1 2RH இல் உள்ள J. A. Massey & Sons Funeral Parlour இல் பார்வைக்கு வைக்கப்பட்டு 29-03-2008 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் ஹெண்டன் மயானச்சாலையில் (125, ஹோல்டேர்ஸ் றீல் றோட், லண்டன் NW7 1NB) தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மலர் வளையம் அனுப்புவோர் மேற்படி Funeral Parlour இற்கு அனுப்பவும்.

**Mr. Kandiah Sathananthan** born in Paththameni, Atchuveli, Sri Lanka who was residing at No.9 Colbeck Road, West Harrow, Middx and loving husband of **Barbara Jean** passed away on 17th March 2008.

His remains will be kept for viewing between 9.00am and 5.00pm on **Friday 28th** March 2008 at the premises of Funeral directors.

**J A Massey & Sons**
142, Station Road, Harrow HA1 2RH
(Tel: **0208 422 1688**)

Cremation will take place on **Saturday 29th** of March 2008 at 2.00pm at

**Hendon Crematorium**
**125, Holders Hill Road, London NW7 1NB.**

Please send floral tributes etc. to the address of the funeral directors.

Information by: **Capt. Chandrapragasam**